செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம் ; விரோதி ளு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௩] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ளு ஆவணி மீ கஅ உ வெள்ளிக்கிழமை (3-9-1971) [இல- உக

## திருமுறைகளைஓதவோ - ஓதுவோரை மதிக்கவோ இன்றைய

# மாணவர் பின்னிற்கின்றனரே?

— பேராசிரியர் மயில்வாகனம் அவர்கள்

## சைவ சித்தாந்தத்தின் பெருமை

### சிவஞான சித்தியார் சுபக்கம் புத்துரை வெளியீட்டு விழாவில் அறிவுரை

31-8-71 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு இவ் விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் தலைமையில் விசேஷ பூசை ஆராதனைகளுடன் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த கல்விமான்கள் பலர் சமுகமளித்திருந்தனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் ஆசியுரை வழங்கினர். புலவர்மணி சோ. இளமுருகனருடைய வாழ்த்து இசைப்புலவர் ந. செல்லத்துரை அவர்களால் படிக்கப்பட்டது.

தலைவர் தமது தலைமை உரையில் பேசிய கருத்துக்கள் யாவராலும் மெச்சப்படத்தக்கன. அவர் குறிப்பிட்டதாவது:-

சைவசமயத்தை அறிவதற்கு முதலில் எனக்கு தேவார திருவாசகங்களே துணையாயிருந்தன. அவற்றை ஓதுங் காலத்தில் பொருள் விளங்கவில்லை; சிலர் சித்தாந்த சாத்திரங்களைப் படித்தால் அவற்றின் பொருள் விளங்குமெனப் புத்தி கூறினர். சிவஞான போதம் சிவஞான சித்தியார் முதலிய நூல்களைப் பெற்றுப் படிக்கத் தொடங்கினேன். அவற்றின் பொருளும் விளங்கவில்லை. சிவஞான சித்தியாருக்கு திருவிளங்க தேசிகருடைய உரையைப் பெற்றுப் படிக்குமாறு நண்பர்கள் கூறினர்கள். துரதிஷ்டமாக அவருடைய சிவஞான சித்தியார் உரை அகப்படவில்லை. அப்படிக் கிடைத்தற்கரிய நூலை யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம் அச்சிட முன் வந்தது. அதற்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆதரவையுமளித்தேன். இறைவன் அருளால் அந் நூல் வெளிவந்துவிட்டது. அது சைவ உலகுக்கு ஒரு பெரும் பேறாகும். அவ்வரிய தொண்டினைப் புரிந்த இக் கழகத்தை யாவரும் பாராட்டுதல் வேண்டும்.

முற்காலத்தில் எகிப்திய நாட்டில் நைல்நதி பெருக்கெடுக்கும் காலத்தில் அயலிலுள்ள வயல்கள் வெள்ளத்தினால் மூடப்பட்டுவிடும். வெள்ளம்வற்றியபின் வயல்களின் எல்லைகள் அழிந்திருக்கும். வயற்காரர்கள் எல்லைபோடுவதில் சண்டையிடுவர். அவ்வெல்லைகளைத் திருப்பிப் போடுவதற்குத் துணையாகவிருந்த அளவு முறையே கேத்திர கணித தோற்றத்திற்கு வித்தாகவிருந்தது. கிறீஸ் நாட்டில் கணித விற்பன்னராகிய யூகிளிட் என்பவரே கேத்திர கணிதத்தை ஆரம்பித்தவர். புள்ளியும்நேர்கோடுமே கேத்திர கணிதத்துக்கு அடிப்படைச் சாதனங்கள். யூகிளிட் புள்ளிக்குக்கொடுத்த வரைவிலக்கணம் அது பருமனில்லாதது என்பதாகும். நேர்கோட்டுக்கு அவர் கொடுத்த வரைவிலக்கணம் இரண்டுபுள்ளிகளுக்கிடையிலுள்ள மிகக் குறுகிய தூரமாகும். அவ்வரைவிலக்கணங்களில் இக்காலம் மாற்றப்பட்டிருக்கின்றது. இரண்டு நேர்கோடுகள் வெட்டுகின்றஇடம்தான் ஒரு புள்ளியாகும். இரண்டு புள்ளிகளை நேரான அடிமட்டத்தினால் தொடுக்கப்படுகின்ற தூரம்தான் நேர்கோடாகும். சைவ சித்தாந்தமும் அது போலப் பழைய சைவசாத்திரக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மெய்கண்டதேவ நாயனாரால் தாபிக்கப்பெற்றது.

பண்டைச் சைவ சாத்திர நூல்களினின்றும் திரட்டிய ஞான பொக்கிஷமே சிவஞானபோதம். மெய்கண்டதேவர் முதற்சூத்திர இறுதியில் 'எனமனூர் புலவர்' எனப் பூர்த்தி செய்கின்றமையும் மாணிக்கவாசகசுவாமிகளுக்குத் திருப்பெருந்துறையில் உபதேசஞ் செய்த குருமூர்த்திகள் திருக்கரத்தில் விளங்கிய நூல் சிவஞானபோதமென்பதும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

மூன்றும் நூற்றாண்டு தொடக்கம் பத்தாம் நூற்றாண்டுவரை தமிழ் நாட்டில் சமயகுரவர்கள் அன்புநெறியைப் பரப்பினார்கள். மெய்கண்டதேவர் காலத்திற்குப் பின் அறிவு நெறி வளர்க்கப்பட்டது, இக்காலம் அன்பு நெறியும் அறிவு நெறியும் பரப்பப்படுதல் வேண்டும்

மாணவர்கள் இக்காலச் சூழ்நிலையில் தேவார, திருவாசகங்களை கற்று மனனஞ் செய்ய வெட்கப்படுகின்றார்கள். அவர்கள் சான்றோர்களாக நாட்டில் விளங்குவதற்கு அவற்றை மனனஞ்செய்து பாராயணஞ்செய்தல் வேண்டும்.

பண்டிதர் வழக்கறிஞர், திரு. ஏகாம்பரம், முதலியார் செ. முத்துத்தம்பி, திரு. ம. ஸ்ரீகாந்தா திரு. சி. கதிரவேற்பிள்ளை எம். பி, ஆகியவர்கள் பாராட்டுரை வழங்கினார்கள்.

திரு. சி. சிவகுருநாதன், தலைவர், யா. கூ. த. நூ ப. விற்பனைக் கழகம் சார்பாக வரவேற்புரை நிகழ்த்தினர். கூட்டுறவு அச்சக முகாமையாளர் திரு. P. J. A நல்லையா அவர்களுக்கு விழாத்தலைவரவர்களால் பொன்னாடை போர்க்கப்பெற்றது.

திரு. த சண்முகலிங்கம்அவர்கள் வாழ்த்துச்செய்திகளைப்படித்தார்

முதற்பிரதியை வட்டுக்கோட்டை திரு. அ தில்லையம்பலம் J. P. அவர்கள் விலைக்குப் பெற்றனர். சபையில் எராளமான பிரதிகள் விற்கப்பெற்றன கழகக் காரியதரிசி யவர்களுக்கும் நன்றி கூறினர். தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது

(நமது நிருபர்)

## இவைபற்றி நீர் அறிந்திருக்கவேண்டும்

"உங்களுடைய குடும்ப டாக்டர் குறிக்கும் மருந்து 100 க்கு 900 விகிதம் அதே குணத்தைத் தரும் வேறு மருந்துகளிலும் பார்க்க விலை கூடியதாயிருக்கக் கூடும்" இப்படி இலங்கை வைத்தியப் பத்திரிகை (Ceylon Medical Journal) ஆசிரியர் கூற்றில் கூறுகின்றது அறியாமை எங்கு கொண்டு செல்கின்றது என்று சுட்டிக்காட்டும் நோக்கமாக இந்தப் பெரிய வித்தியாசத்தைச் சகாக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இக்கூற்று எழுந்தது போலும்.

அது தொடர்ந்து எழுதுகிறது, "உதாரணமாகச் சில மாதங்களுக்கு முன்னே பிரிட்டனிலிருந்து திரும்பிய டாக்டர் ஒருவர் வோட்டால் (Fortal) என்ற மருந்தை நோயாளி ஒருவருக்குக் குறித்திருந்தார். நோவைக் கொல்லும் ஒரு மருந்துக்குப் பிரிட்டனில் வழங்கும் பெயர் இது. அதே மருந்து இலங்கையில் சோசிகன் (Sosegon) என்ற பெயருடன் விலைப்படுகிறதென்றதை அவர் அறியாதிருந்தார். இலங்கை முழுவதும் தேடியும் "வோட்டால்" கிடைக்கவில்லை என்று இனத்தவர்கள் சொன்னதும் பிரிட்டனிலிருந்தே அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று டாக்டர் கேட்டுக்கொண்டார். அவர்கள் அங்கிருந்து வரவழைத்தார்கள். ஆனால் தேவையற்ற செலவிலும், இறக்குமதி உத்தரவு முதலிய கஷ்டங்களிலும் முடிந்தது"

ஆசிரியர் தொடர்ந்து எழுதுகிறார் "மருந்தின் பெயரில் விலைப்படும் மருந்துகள் கொம்பனிகள் தாங்கள் அதே மருந்துகளுக்குக் கொடுக்கும் பெயர்கள் மூலம் (Brand names) விலைப்படும் மருந்துகளிலும் பார்க்க மலிவானவை. உதாரணமாக அநேக சோதனையின் பின்பு நல்லதென்று ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தெற்றசயிக்கிளின்கள் (Tetracyclines) 100 க்கு ரூபா 13-88 ஆக விலைப்படுகின்றன. அமரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அதே மருந்து 100 க்கு ரூபா 129-96 ய் கொம்பனி கொடுத்த பெயரில் விலைப்படுகிறது" விலைகூடிய மருந்து என்று திருப்தி அடைபவர்களும் உளர். வறியவர் அதை வேண்டத் தாலியையே அடைவு வைக்கவும் கூடும், அன்னிய செலவாணி போதாதிருக்கும் இக்காலத்தில் வைத்தியர் பொறுப்புணர்ச்சியுடன் திருப்தி அடையும் சிறு தொகையினரை மாத்திரம் மனதில் கொண்டு வைத்தியம் செய்தல் கூடாது. கையாளும் மருந்துகள்பற்றி எல்லாம் அறிந்திருத்தல்வேண்டும். வைத்தியம் செய்யும்வரை வைத்திய மாணவராயுமேயிருத்தல் வேண்டும். அல்லது சமுதாயத் துரோகிகள் என்றே அவர்களை மதிக்கலாம்,

கொக்குவில், Dr, ச. இராசரத்தினம்
23-8-71.

## ஞானவைரவர் கோயிலில்

### பதிக அரங்கேற்றம்

கோப்பாய்க் கவிஞர் திரு. மு. க. சூரியன் யாழ்ப்பாணம் அரசினர் பெரிய ஆசுபத்திரி ஞானவைரவர் சுவாமி பேரில் பாடிய பதிகம் 4-9-71 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீன தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் அரங்கேற்றப்படும். திரு. சிவ. உ. சோமசேகரம் M. A. Ed. (Lond) வரவேற்புரை வழங்குவார்கள்,

முதலியார் செ. முத்துத்தம்பி, வைத்தியகலாநிதி இ. அருள்பிரகாசம், வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை, இரசிகமணி, கனக செந்திநாதன் உட்படப் பலர் ஆய்வுரை வழங்குவர். பதிகாசிரியருக்குத் தலைவர் பொன்னாடை போர்ப்பார்கள்.

## செல்வச் சந்நிதி

முருகப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு அநுக்கிரகம்புரியும் தலங்களுள் சிறந்ததாகிய இத்தலத்தினது இவ்வருட இரதோற்சவம் 4-9-71 சனிக்கிழமை அன்றும், 5-9-71 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஞு ஆவணி மீ கஅ-உ வெள்ளிக்கிழமை [1971]

## மலைநாட்டில் சைவத்தொண்டு

"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"

சைவ சமயம் தொன்மையானது. அது சிவத்தை யடையச் செய்யும் மார்க்கம். மக்கள் புலன் வழியிலே மனத்தைச் செல்லவிட்டு நிலையில்லாத இன்பத்தைத் தேடி அலைகின்றார்கள். நிலையான இன்பத்தை ஒருவன் தனது மனத்தைப் புலன்வழிச் செல்ல விடாது சிவனுடைய திருவடியைச் சிந்திப்பதினாலேயே அடைய முடியும். இந்தப் பேற்றை அடையச் செய்வதே சைவசமயத்தின் நோக்கம்.

பொருள்வசதி இடவசதிகளெல்லாம் குறைந்துள்ள மலைநாட்டிலுள்ள மக்களுக்குச் சைவசமய உண்மைகளையும் ஆசார அநுட்டானங்களையும் அங்குள்ள பெரியார்களும் சங்கங்களும் இயன்றளவிற் புரிந்து வருகின்றார்கள். இந்த வகையில் நுவரெலியா (பிளக்பூல்) சைவசமய அபிவிருத்தி மன்றம் புரிந்து வருகின்ற சமயப் பிரசாரம் போற்றற்குரியது. ஷ மன்றம் 'விபூதியின் மகிமை' என்னும் ஒரு சிறு நூலை வெளியிட்டிருக்கின்றது. அதில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய திருநீற்றுப் பதிகமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. விபூதியின் பெருமை விபூதி தயாரிக்கும் முறை, விபூதி யணிவதின் பயன், அணியவேண்டிய காலம், அணிவேண்டிய தானங்கள் எல்லாம் சைவாகம முறைப்படி காட்டப்பட்டிருக்கின்றன.

'விபூதி' என்பது மேலான செல்வம். அதனை போற்றி யணிகின்றவர்கள் இம்மைப் பயனையும், மறுமைப் பயனையும் அடைவார்கள். மலையகத்தில் சிவதீட்சை பெறுவோருககு 'விபூதிமகிமை' என்னும் நூலையும் திருநீற்றுப் பையையும் வழங்குவதற்குச் சைவ சமய அபிவிருத்தி மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. மன்றத்தின் சேவை பாராட்டற்குரியது.

மன்றத்தின் தலைவர் திரு. மு, கா. கணபதிப்பிள்ளை இவ் வியக்கத்துக்கு அச்சாணியாக விளங்குகின்றார். சைவ மக்கள் அவருக்கு வேண்டிய உதவியையும் ஆக்கத்தையு மளித்து அவருடைய சேவையை விருத்தியடையச் செய்தல் பெரும் புண்ணியமாகும்.

வெளிவந்துவிட்டது. உ
அருணந்தி சிவாசாரியார் இயற்றிய
**சிவஞானசித்தியார் - சுபக்கம்**
மூலமும்
திரு. மு. திருவிளங்கதேசிகர் இயற்றிய புத்துரையும்
விலை: 15.00 —0— தபாற்செலவு ரூபா: ஒன்று
பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.
வெளியீடு: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி சபை

### நாவற்குழி கிராம சபைப் பிரதேசக் குழு:

30-7-71 வெள்ளிக்கிழமை மாலை 5 30 மணியளவில் நாவற்குழி கிராம்சபை மண்டபத்தில் வடமாகாண உதவி அதிபர் ஸ்ரீமான் ரீ. முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில் மேற்படி கூட்டம் ஆரம்பமாகியது. திரு. இ. சிதம்பரப்பிள்ளை, திரு. ரீ சண்முகராசா ஆகியோர் ஆலயப் புனருத்தாரணத்தின் அவசியம் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினர்கள், இதன் பின் இக கிராமசபைப் பிரிவுக்கு பிரதேசக் குழு தெரிவு செய்யப்பட்டது.

செல்வச்சந்நிதிக் கந்தன் தோத்திரம்

உ

## சந்நிதிக்கந்தனே! போற்றி! போற்றி!

சரவணப வாநந்த குருபரா போற்றிகுக
ஷண்முகா போற்றி ஞானப்
பிரணவ மகாமந்ர குருநாய காபோற்றி
பிறைசூடி மைந்த போற்றி
அருணகிரிக் கிளிபாடும் அரியபுகழ் கேட்டவேல்
அழகனே போற்றி இன்பக்
கருணைமிகு சகலகலை வளர்செல்வச் சந்நிதிக்
கந்தனே போற்றி போற்றி. (1)

வண்ணமயிலா போற்றி வாரணக் கொடியசைய
வருகுமர போற்றி அசுரர்
மன்னுருடி பொடிசெய்த மால்மருக னேபோற்றி
மலைமாது பயிலுமாதி
முன்னைப் பழங்கருணை மூர்த்தியே, புனவள்ளி
முதல்விருஞ் சரணாகதிக்
கன்னியர் னருணலம் பொலிசெல்வச் சந்நிதிக்
கந்தனே போற்றி போற்றி. (2)

நற்புகழ் படித்துமகிழ் பொற்புமிகு மடியவரின்
நாவில்நட மாடுமரசே
சிற்பரா போற்றிமலை யற்புதாம் பிகைபெற்ற
செல்வனே போற்றி மேலாம்
தற்பர கணேசனுக் கிளையவா போற்றிதமிழ்
தந்தவா போற்றி, நுங்கள்
கற்பகத் தேரேறி வருசெல்வச் சந்நிதிக்
கந்தனே போற்றி போற்றி. (3)

—அளவையூர் "அருட்கவி", சீ. வி.

# திருக்கேதீச்சரப் புனருத்தாரணம்

## மட்டக்களப்பில் கிளைச்சபைத் தாபனம்

[ திருக்கேதீச்சர புனருத்தாரணச் சபையின் கிளையொன்று சமீபத்தில் மட்டக்களப்பிலே புறக்ரர் திரு கே. வி. எம் சுப்பிரமணியம் தலைமையில் நிறுவப்பட்ட பொழுது மேற்கூறிய கிளையின் உபதலைவரும் கட்டட நிர்மாணக் குழுவின் தலைவருமாகிய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முன்னாட் பிரதியகமர் திரு. எஸ் ஆறுமுகம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு ]

இம்மாதம் 27-ந் தேதியன்று சிவன்கோயில் மூலஸ்தானமும் கௌரி அம்பாள் ஆலயமும் திருத்தி யமைத்தற்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது

**இராவணன் யாத்திரை:**

தொன்மைவாய்ந்த இலங்காபுரத்தின் வரலாறு பற்றிப் பல புராணக் கதைகளும், இதிகாசங்களும் ஐதிகங்களுமுள. இலங்காபுரியை ஆண்ட இராவணேஸ்வரனின் கோட்டை இலங்கையின் தென்கிழக்குக் கரைக்கு அப்பால் உளதென்பது ஐதிகம். எனவே, சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் சிவதரிசனத்திற்காகக் கோணேஸ்வரத்திற்கும், கேதீச்சரத்திற்கும் கிழக்குக் கரையோரமாக ஒழுங்காக யாத்திரை சென்றுவென்று கூறப்படுகின்றது.

கேதுவின் தலத்திலே, மயனென்பவன் தனதுமகள், அதாவது, இராவணனின் மனைவி மண்டோதரி வழிபடுவதற்கென ஈஸ்வரனுக்காக ஆலயமொன்றை அமைத்தான். அத்தலமே இன்று மன்னாரிலே கேது-ஈஸ்வரன் என்று வழங்கப்பட்டு வருகின்றது. அதே போன்று கோனுக்காக ஈஸ்வரனின் ஆலயமொன்று இராவணேஸ்வரனின் புராணக் கதையுடன் தொடர்புடைய கோணேஸ்வரத்தில் அமைக்கப்பட்டது.

இராமாயணத்திற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றன. அகஸ்திய முனிவர் தமது உறைவிடமாகிய கயிலாயத்திலிருந்து வேதாரணியம், சிதம்பரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்கு யாத்திரை செய்தாரென்பது ஐதிகம்.

இலங்கையில் விஜயனுடைய காலத்திற்கு முன்னரே, வடக்கே நகுலேஸ்வரத்திலும், தெற்கே தொண்டேஸ்வரத்திலும், கிழக்கே கோணேஸ்வரத்திலும், மேற்கே கேதீஸ்வரத்திலும், முனீஸ்வரத்திலும் பரமேஸ்வர மூர்த்திக்கு ஐந்து ஆலயங்கள் இருந்தனவென்று புகழ்பெற்ற கல்விமான் டக்றர் போல். ஈ. பீரிஸ் என்பவர் றோயல் ஆசியச் சபையின் சஞ்சிகையிற் கூறியுள்ளார். இந்தி அரசனாகிய விஜயனும் தன் மக்களின் நன்மதிப்பைப் பெறுமுகமாகப் பல சிறந்த கைங்கரியங்களில் ஈடுபட்டான். இவன் நான்கு திசைகளிலும் உள்ள நான்கு சிவாலயங்களைத் திருத்தி யமைத்ததாக வைபவமாலை கூறுகிறது.

நான்காம் நூற்றாண்டிலே, கோபங்கொண்ட அரசனொருவன் கிழக்குப்பகுதியிலுள்ள சிவன்கோயில்களை (பிராமண ஆலயங்களை) அழித்ததாகச் சொல்லப்படுகின்றது. இவற்றுளொன்று கோணேஸ்வரம் எனப்படுகின்றது. ஏனைய கோயில்கள் ஏரகவிலாவிலும் (ஏருவூரிலும்), திருக்கோயில், பொத்துவில், பிரதேசங்களிலும் இருந்தன என்று சொல்லப்படுகின்றது.

**புகழ்பெற்ற துறைமுகம் மாதோட்டம்:**

அக்காலத்திலே திருக்கேதீச்சரம் அமைந்துள்ள மா

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## அணிந்துரை அரங்கம்

### அருளமுதம்

திங்கள் வெளியீடு
சிறப்புமலர்
அருள் 10 — அமுதம் 1
வருட சந்தா ரூபா ஐந்து
தனிப் பிரதி: சதம் ஐம்பது.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய இடர்களையும் பதிகத்துடன் ஜகத்குரு. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், கி. வா. ஜகந்நாதன் முதலிய பெரியார்களுடைய கட்டுரைகள், வாழ்த்துப் பாக்களும், ஆங்கில இந்துசாதனத்தின் தலையங்கமும் அடங்கியுள்ளன. ஆதீனத் தலைவரைப் பற்றிய கட்டுரைகளும், ஆதீனப் பணிகளைப் பற்றிய கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

x x x

### இந்து

தொகுதி 1 - வெளியீடு 3 கிடைத்தது. நல்லூரில் பிரசுரமாகின்றது. இதன் ஆசிரியர் ஜெ. நாகேஸ்வரன், 135 பருத்தித்துறை வீதி, நல்லூர்.

இந்துசமய வளர்ச்சிக்குரிய கட்டுரைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும், வெளிவந்திருக்கின்றன. வருடசந்தா ரூபா ஐந்து.


x x x

### யோகசித்தி

மில்க்வைற்சோப் வெளியீடு 31
ஆக்கியோன்:
கவியோகி சுத்தானந்த பாரதியார்

இவர் கவிப்புலமையும் வித்தக நல்லறிவும் பெற்றவர் ஞானசித்தர் என்னும் பெரியாரிடம் உபதேசம் பெற்றவர். அவரிடத்தில் வேதாகமக் கல்வி, இலக்கண இலக்கிய அறிவு கவிப்புலமை பெற்றவர். தமது யோக சாதனையில் பெற்ற அனுபவங்களை செய்யுள் வடிவில் மக்களுடைய ஆன்மலாபம் கருதி வெளியிட்டுள்ளனர். தியானநெறிக்கு பேருதவி புரியும் நன்னூல். யாவரும் பெற்றுப் படித்துச் சாதனை செய்து நன்மை பெறலாம்.

## மக்கள் நிலை மாருதா?



பக்தர்: "நமது செல்வச் சிறுவர்கள் தேவார திருவாசகங்களைக் சற்று மனனஞ் செய்வதற்கு இன்றைய சூழ்நிலையில் வெட்கப்படுகிறார்கள் — இந்த நிலைமை மாற வேண்டும்" என பேராசிரியர் அ. வி. மயில்வாகனனார் 'சிவஞான சித்தியார்' நூல் வெளியீட்டு விழாவில் ரொம்ப அழகாகக் கூறினர்.

சித்தர்: "மாணவர்மட்டுமேன்ன பெரியவர்களுள்ளும் பலர் தம்மைச் சைவரென்று கூறிக்கொண்டு திருமுறைஓதப் பின்னிற்பார்கள்; – அதே பேர்வழிகள் திருமுறை ஓதுபவர்களை அவமதித்தும் கேலி செய்தும் நிற்பார்கள்; இந்த நிலையில் நம் சைவ சமய வளர்ச்சியிருக்கின்றது; நம்ம பேராசிரியர் கூறிய கருத்தை உணர்ச்சியு ளவர் யாவரும் நன்கு சிந்திக்கனும் அப்படியென்று கூறுங்க!

## மஹாளயபட்ச மகிமை

**சைவ மக்கள் இல்லந்தோறும் இருக்கவேண்டிய கைநூல், தமிழிலும் - ஆங்கிலத்திலும் உள்ள அரிய நூல்**

— விலை சதம் 25 மட்டுமே —

தென்புலத்தாருக்குச் சிரார்த்தம் — மஹாளயம் முதலிய கிரியைகள் ஏன் செய்யப்பெற வேண்டுமென்பதும் அவற்றைச் செய்வதனால் நாம் பெறக்கூடிய நன்மைகள் யாவையென்பதும், புரட்டாதி மாதம் ஏன் மஹாளயத்துக்கு உகந்ததென்பதும் இந் நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன,

☞ இவ்வருட மஹாளய பக்ஷம் 5-9-71 இல் ஆரம்பிக்கின்றது.

கிடைக்குமிடம்: அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


## நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்
# இலவச தேவாரவகுப்பு

நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தேவார வகுப்பு இலவசமாக நடைபெறவிருக்கிறது. இவ் வகுப்பினை திருமுறைக் கலாநிதி, சங்கீத பூஷணம், **தர்மபுரம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள்** ஆரம்பித்து வைப்பார்கள். எதிரே வரும் புரட்டாதி மாத விஜய தசமித் திருநாளில் மேற்படி வகுப்பு ஆரம்பிக்கப்பெற்று, சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. வகுப்பில் பங்குபற்றிப் பயன்பெறவேண்டும் என்ற எழுச்சி நல்லூரிலும் சூழலிலுமுள்ள சிறுவர் சிறுமிகள் வசம் மிகுதியாகக் காணப்படுகின்றது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகளின் அருளாணையின் வண்ணம் வகுப்பு ஒழுங்குகளை ஆதீனமேலாளர் திரு. வே. சபாபதிப்பிள்ளை அவர்களும், ஆதீனத் தொண்டர்களும் கவனித்து வருகின்றார்கள். (காயன்மார்கட்டு நிருபர்)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 10480

நெடுந்தீவு. நெடுந்தீவு மத்தி சின்னத்தம்பி குமாரசுவாமி —வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம். 1. வேலுப்பிள்ளை சண்முகம் (மரணம்)

வண்ணார்பண்ணை கிழக்கு 2. பெண் மாணிக்கம் தற்போது வே. சண்முகத்தின் கைம்பெண் காலஞ் சென்ற முதலாம் எதிராளியின் பிரதிகாரியஸ்தராகவும் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10480-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 2ம் திகதி (2—10—71) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2355/-ம் இதில் ரூபாய் 1500/-க்கு 19—12—68 திகதி தொடக்கம் 14—12—69 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319-72 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிலுள்ள 'நிர்நொச்சியடியும் கட்டைக்காடும்' நிலப்பரப்பு 17 இது உத்தரவுபெற்ற உலாந்தா சீ. சின்னத்துரையால் 9-6-1952 இல் 544ம் இலக்கப் படத்தில் 5ம் துண்டுக்கு நிலப்பரப்பு ஒன்றும் குளி 8, 1/8ம் முழுக்காணியிலும் பொது பாதைக்கும் அதில் இருந்து கையொழுங்கைக்கும் விடப்பட்ட நிலம் 12ஆம் துண்டும் இன்னும் கிழக்கெல்லை காணிக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4018ம் இலக்க வழக்கில் இ. பழனித்துரைக்குத் தீர்ந்த இரண்டு குளி நீக்கி குறித்த நிலப்பரப்பு ஒன்றும் குளி 8, 1/8ம் குறித்த படத்தில் 2ம் துண்டில் இருக்கும் கிணற்றில் பங்கும். அர்வை நிலம் துலா, ஆடுகால் பங்கும், பாதை உரித்தும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு இ. பழனித்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு குறித்த படத்தில் 4-ம் துண்டு இ. மாணிக்கத்திற்கும் பெண் செல்லமுத்துவுக்குமுரிய ஆதனம், மேற்கு புதிதாக அமைந்த பாதை குறித்த படத்தில் 12ம் துண்டு தெற்கு சுப்பர் கந்தையாவின் ஆதனம். இதடங்கலும். முற்பதிவு D. 258/261

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer

தெல்லிப்பழை, 20-8-71

எண் 216 3-9-71



# நிறுத்திவைத்த காணி விற்பனவு
## 14—9—71-இல் நடைபெறவுள்ளது

30-6-71 -ல் வெளிவந்த "ஈழநாடு" பத்திரிகையில் வழ. இல. M. B. 8533 - ஆம் இலக்கக் கோட்டு விற்பனவு விளம்பரத்தில் விற்பனவு 15-8-71 என விளம்பரம் செய்யப்பட்டது. அன்றையதினம் புதிய நடைமுறையின்படி விடுமுறை நாளாக இருந்தமையால் ஷை காணி விற்பனவு எதிர் வரும் 14-9-71 முற்பகல் 10 மணிக்கு பின் போடப்பட்டுள்ளது

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, உடைக்குளி, யாழ்ப்பாணம்,

இ. கனகரத்தினம்
கொமிஷனரும், விலை மதிப்பாளரும்

எண், 215 7-9-


# கந்தபுராண வாச்சியார்த்த ஆராய்ச்சி

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

(முன் வளர்ச்சி — 5)

புராணங்களாவன உலக போகத்தையே மெய்யென்றழுந்தி நுகர்ந்து நிற்கும் மந்த மந்த மதியினரையுமுய்விக்க வேண்டி, நோய் தவிர்க்கும் மருந்தினையருந்த உவர்த்து மனம் மறுகி நிற்கும் சிறுவர்க்கு அவர் விரும்பியுண்ணும் பால் தேன் ஆதிய மதுர உணவுகளைக் காட்டிக் காட்டி அவற்றுடன் அம் மருந்தினையும் அருந்தி, தாயர் தவிர்த்தல்போல, அம் மந்தமதியோர் உகந்து நுகரும் அருந்தல் பொருந்தலாதிய உலகபோக விஷயங்களை இடையிடையே வர்ணனைகளாக எடுத்தெடுத்துக்காட்டி அவற்றுடன் பிறவி நோய் நீக்கத்துக்குச் சாதகமான சமயாசாரம், தர்மம், நீதியாதியவற்றைப் பயக்கும் கதைகளையுணர்த்தி இங்ஙனம் அமைக்கப்பட்டன நூல்களாம் ஆதலின், தர்க்கரீதிக்கு அடாதன ஆதிரவும் வரப்பெறுவனவாம். கற்போர் கேட்போர் அவற்றை நீக்கிச் சமயாசாரமாதியவற்றையே கைக்கொண்டு உய்யக் கடவர்.

"மந்தமார் புத்தியுடையராய்
வல்லமாயை யான்
மூடிடப்பட்ட
பந்தராயினருக் கனுதனமாகப்
பகர்ந்ததேயன்றி,
மறந்தேனுஞ்
சந்தமார்ந்துயர்ந்த பாரமார்த்
திகமாச் சாற்றின
தில்லையாலுணர்வீர்"

என்பதனாலும் புராணவியல்பினை அறிக.

இவ்வாறாயின், புத்திபெரிதும் விருத்தியுற்ற இக்காலத்தில் புராண பாராயணம் வேண்டாமேயெனின் அற்றன்று இக்காலப் புகதி பௌதிக தத்துவமாதியவற்றில விரிந்தமைந்தயன்றிச் சமய விஷயங்களிற் பெரிதும் மந்தப் புத்தியாகவே காணப்படுகின்றது ஆதலின் வேண்டப்படுவதாம். இன்னும் அப்பாராயணம் பாடசாலையில் குறித்த ஓர் வகுப்பிலுள்ளோர் சித்தியடைந்து மேலேறிய பின்னரும், அவ்வகுப்பு பாழாகாமல் கீழ் வகுப்பினின்றோர் வந்து கற்றற்பொருட்டு நிரந்தரமாயிருப்பது போல, முன்னர்ப் பாராயணஞ்செய்து உய்ந்தோரொழியப் பின் வரும் அறிஞர் தத்துவப் பொருளுணர்தற்கும், மற்றையோர் சமயாசாரமாதியன உணர்தற்கும் உய்தற்பொருட்டும், தற்பொழுது போக்குதற் பொருட்டும் ஆலயங்களில் நிரந்தரம் நிகழ வேண்டியதாகவுமிருக்கின்றது என அறிக.

### திருத்தம்

27-8-71 இந்துசாதனத்தில் வெளிவந்த M B 10517- ஆம் இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் தீர்வைத்தொகையில் முதலும் வட்டியுமாக ரூபாய் 11950/- மேலும் 1000/- ரூபாவுக்கு என்று இருப்பதை முதலும் வட்டியும் ரூபாய் 11950/- மேலும் ரூபாய் 10000/- என்று திருத்தி வாசிக்கவும்.

## பாண்டுச்சேரியில், தவத்திரு. பாரிஜாத கண்ணன் சுவாமிகளின் அற்புத அதிசயங்கள்

செந்தமிழ்நாட்டில் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள பாண்டுச்சேரி (புதுச்சேரி யிலுள்ள, முத்தியால்பேட்டையில் யோக சாதனைகளில் சிறப்புப்பெற்று விளங்கிவருகின்ற தவத்திரு. பாரிஜாத கண்ணன்சுவாமிகள், தினமும் பகல் 12 மணிமுதல் 2 மணிவரை தரிசனம்செய்து தங்கள் உண்மையான கோரிக்கைகளை விண்ணப்பம் செய்து கொள்ள வருபவர்களை அழைத்து கோரிக்கைகளைக்கேட்டு, அவர் அவர்களிடத்தில் "வெற்றிலை"யைக் கொடுத்து, சூரியகிரணத்தின் அபார சக்தியை "வெற்றிலையில்" ஏற்படுத்தி அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள்.

தவத்திரு. சுவாமிகள் உண்மைக்கு விரோதமான கோரிக்கைகளைக் கூறினால் அதனைத் தெரிந்து அம்பலப்படுத்துகின்றார்கள். தவத்திரு. சுவாமிகளிடம் நேரில் வரமுடியாதவர்கள், கோரிக்கைகளை கடித மூலம் அனுப்பி பயன்பெறலாம். முக்கிய நாட்கள் அமாவாசை, பௌர்ணமியாகும்

### ஈழத்துமக்கள் தொடர்பு

தவத்திரு. சுவாமி அவர்களை ஈழத்துக்கு அழைக்க, யாழ்ப்பாணத்து நல்லூருக்கு அண்மையிலுள்ள ஒரு சைவ சமய அபிவிருத்திக் கழகம் முயற்சியெடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது

(எமது சிதம்பரம் நிருபர்)

## முசுகுந்தார்ச்சனை
### தியாகராச மூர்த்திக்கு விசேட அலங்காரம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆடித் திங்கள் 24 ஆம் நாள திங்கட்கிழமை அன்று முசுகுந்த சக்ரவர்த்தியினால் எழுந்தருளச் செய்யப்பெற்ற மூர்த்தங்களுள் மிகச் சிறப்புடைய திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி "நவரத்தினக் கற்கள் வைத்து இழைக்கப்பட்ட விலையுயர்ந்த தொங்கு மகரகண்டிகை"யைக் காணிக்கையாக அணிவித்து "முசுகுந்தார்ச்சனை"யை நடத்திவைத்துத் தரிசனம் செய்தார்கள்.

முசுகுந்தார்ச்சனை வழிபாட்டை முன்னிட்டு ஆதீனத் திருக்கோயில்களிலுள்ள எல்லா ஓதுவா மூர்த்திகளும் வந்திருந்து காலை முதல் இரவு வழிபாடு முடியும்வரை திருவாரூர்த் தல தேவாரப் பதிகங்களை இன்னிசை கருவிகளுடன் பாராயணம் செய்தார்கள்.

ஆதீனத்தின் பத்தாவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் அருளிய "சிறு மூர்த்தி திருவருட்பா"வை ஆதீன ஓதுவாமூர்த்திகள் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் முறையாக ஓதினார்கள்.

நகரமக்கள் ஏராளமாகவந்து கூடி 'மகரகண்டிகை" அணிவிக்கப்பெற்ற ஸ்ரீ தியாகராஜப் பெருமானைக்கண்டு களித்து தரிசனம் செய்து பரவசத்தில் ஆழ்ந்தனர்.

சப்த விடங்கத் தலங்களில் இருக்குவனையும் ஒன்றும் முசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்ற தியாகராஜ மூர்த்திகளில் இங்கு எழுந்தருளியுள்ள தியாகராஜ மூர்த்தியும் ஒன்றாகும்.

ஸ்ரீ ஸா. சோமசுப்பிரமணியம்


சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்.

## சித்தாந்த பிரவேச, பாலபண்டித தேர்வுகள் 1971

ஷை தேர்வுகள் 1971 ஆம் செப்டெம்பர் ௴ 10, 11, 12 ஆம் தேதிகளில் (முறையே வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்) சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழும்.

தேர்வு எழுதுவோர்களுக்கு அவரவர் முகவரிகளுக்கு நுழைவுச் சீட்டு, நேரசூசிகள் அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை அவற்றைப்பெறத் தவறியவர்கள் உடனே என்னோடு தொடர்பு கொள்ளவும்.

சி. சிவகுருநாதன்
தேர்வுச் செயலாளர்,
சைவபரிபாலன சபை
450, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். 25-8-71


### வவுனியாவில் திருக்கேதீச்சர பிரதேசக் குழு ஆரம்பம்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையின் வவுனியா பிரதேசசபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஆவணி திங்கள் 14-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. செ. சிவஞானம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. தலைவர் தமது உரையில் ஷை ஆலயத்தின் பழமை வாய்ந்த வரலாற்றினை விளக்கமாக எடுத்துரைத்தார். இத் திருப்பணிக்கு சைவத் தமிழ்மக்களொவ்வொருவரும் தாராளமாக உதவவேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். ஆலயத் திருப்பணிக்கு வவுனியா மக்கள் என்றும் கைகொடுத்துதவுவரென திரு. த. நல்லதம்பி, திரு. கு. ஐயாத்துரை ஆகியோர் குறிப்பிட்டனர். ஆலயத் திருப்பணிக்காக இப் பிரதேச சபை ரூபா 25000 ஐ இலக்காக வைத்து அதைத் திரட்டிக்கொடுப்பதென்றும், அங்கத்தவர்களைச் சேர்த்தல் நெல்சேகரித்து வழங்குதல் ஆகிய தீர்மானங்களும் செய்யப்பட்டன.

### ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம்

கிளிநொச்சியைச் சேர்ந்த ஸ்கந்தபுரம் குடியேற்றத் திட்டத்தில் முருகன் ஆலயமொன்று அமைப்பதற்காக இன்று காடு வெட்டும் சிரமதானத் திருப்பணி ஆரம்பமாகின்றது.

## நூல் வெளியீடு

முதலியார் திரு. குல. சபாநாதன் அவர்களால் எழுதப்பெற்ற தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி அன்னதான முருகன் வரலாறு நூல் வெளியீடு 2-9-71ல் சந்நிதி முருகன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. (ந. வி)

## புதிய மடம்

வேருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் பக்தர்களின் நலம் கருதி அமைக்கப்பட்ட புதிய மடத்தை மூதூர் இரண்டாவது எம். பி. திரு. அ தககத்துரை அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

## திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்றம்

மேற்படி மன்றத்தின் 17 ஆவது ஆண்டுக்குரிய முதலாவது பேரவை சென்ற 15-8-71 இல் மன்றத்தின் பணிமனையில் நடைபெற்றது. பேரவைக்கு உயர் திரு. சி. குருநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

அவ்வமயம் மன்றத்தின் ஊழியர்கள் தெரிவு மிகவும் அமைதியான முறையில் போட்டியெதுவுமின்றி அருள் நெறிக்கமைய சிறப்பாக நடைபெற்றது.

மன்றப் பொறுப்பு ஊழியர்கள்: தலைவர்: திரு. பெ. கணநாதபிள்ளை பீ. ஏ., செயலாளரும், பொருளாளரும்: திரு. இ. சண்முகராசா, நூலகப்பொறுப்பாளர்: திரு ந. சங்கரப்பிள்ளை, ஆய்வாளர்: திரு. ந. ஸ்ரீ பாலச்சந்திரன், மன்றச் செயலவை ஊழியர்களும், பாதுகாவலர்களும் தெரிவு செய்யப்பெற்றனர். (ந. கி.)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 8099

நாகலிங்கம் குகதாசன்
வீமன்காமம் —வழக்காளி
எதிராக
1 அல்பிரட் மயில்வாகனம் மகேசன்
2 மனைவி மாபல் தேவதாசன்
3 பேரின்பநாயகம் தேவதாசன்
4 மனைவி கிறிஸ்தோப்பர் ஜெகதேவி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8099-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1971-ம் ஞு ஐப்பசிமீ 16ம் திகதி (16—10—71) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 5100/-ம், 6-4-66 தொடக்கம் 26-1-67 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை 'சரணிக்கை' என்றழைக்கப்படும் காணி நி. வ. 10ல், 3½ குலியும் ஆனல் இதில் நி. வ. 11 வீடும், குசினியும் செய்பயிர், வாங்கமிரும், கிணறும், தெற்குப் பக்கதிலிருக்கும் வேப்பமரத்தில் பங்கு எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு காலஞ்சென்ற சித்திவேலுப்பிள்ளை பெண் கிருஷ்ணபிள்ளையும் மருமேரும். தூர்வை நிலமும், மேற்கு ஒழுங்கையும், முருகுப்பிள்ளை பெண் நாகமுத்துவும் சகோதரனும், சகோதரியும் தெற்கு ஞானரத்தினத்தின் பெண் நாகம்மாவும் சகோதரியும் இதடங்கலும், இதில் பிரிக்கப்பட்ட 2/3 பங்கும் தூர்வை நிலமும் கிணற்றிலும் தென்னை மரத்திலும் பங்குண்டு.

இ. கனகரத்தினம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
ஏம். 216 3-9-71

## திருக்கேதீச்சரப் புனருத்தாரணம்

[2-ஆம் பக்கத்து வளர்ச்சி]

தோட்டம் அனது உலகப் புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கியது. கிழக்கேயிருந்து சீன வர்த்தகர்கள் மேனாட்டாருடன் பண்டமாற்றஞ் செய்யும்பொருட்டு அங்கு வந்தனர் மேற்கேயிருந்து பபிலோனியரும், எகிப்தியரும் தங்கள் சிறு பாசி மணிகளையும் கண்ணாடிச் சாமான்களையும் கொண்டுவந்தனர். உரோமானியர் இலங்கைப் பொருள்களை ஏற்றிச் செல்லும் நோக்கத்துடன் மாதோட்டத்தை நாடினர். திறமைவாய்ந்த தங்கள் மாலுமிகள் இளமங்கையரின் வீண் டாம்பீகத்தைத் திருப்திப்படுத்தற்கான மஸ்லின் துணியைப்பெற்று வரும் பொருட்டு அபாயகரமான புயலுடன் போராடி ஆழ் கடலில் ஏன் செல்லவேண்டும் என்று முதலாம் நூற்றூண்டு நெறிமுறையாளரும் நூலாசிரியருமான பிளினி புலம்பியுள்ளார்!

எனவே, மாதோட்டமானது பிறநாட்டு வர்த்தகர்கள் பண்டமாற்றஞ் செய்யும் உலகத் துறைமுகமாக விளங்கியது. குடியிருப்பாகிய மாதோட்டமும் அதன் ஆலயமாகிய திருக்கேதீஸ்வரமும் பண்டைச் சரித்திர காலத்திற் பல நூற்றூண்டுகளாகச் செழிப்புற்றிருந்தன இங்கு கண்டெடுக்கப்பட்ட பண்டைய காலப் பாசிமணிகள், கண்ணாடித் துண்டுகள், உடைந்த சாடித்துண்டுகள், பண்டைக்கால நாணயங்கள் என்பன அங்கச் சர்வதேச வர்த்தகத் தலமாக விளங்கியதென்பதற்குச் சான்று பகருவன. அதனை அடுத்துள்ள குதிரைமலையும் பெயர்பெற்ற புராதன தலமாகும்.

### தேவாரப் புகழ்:

அக்காலத்திற் சைவம் தழைத்தோங்கியது, அதுவே நால்வரின் காலமாகும். எமது சமயம் புத்துயிர் பெற்ற காலம். சைவ வழிபாட்டு முறைகள், கிரியைகள், வழக்கங்கள் முதலியன அப்பொழுது முதலிடம் பெற்றன. அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோர் இலங்கையிலுள்ள பல சிவாலயங்களுக்கு வந்து ஈஸ்வரன் புகழைப்பாடி வழிபட்டனர். ஏழாம் நூற்றூண்டிலே திருக்கேதீஸ்வரம் பற்றிப் பதினொரு பாக்களைக் கொண்ட பதிகம் ஒன்றைச் சம்பந்தர் பாடினூர். திருக்கோணேஸ்வரம் பற்றியும் பதிகமொன்றைப் பாடினூர். பின்னர், பத்துப் பாக்களைக் கொண்ட பதிகமொன்றைச் சுந்தரர் கேதீஸ்வரம்பற்றிப் பாடினூர். நாள்தோறும் சைவ மக்களாற் பாடப்படும் இப்பாமாலைகளே இவ்விரு ஆலயங்களுக்கும் தேவாரப் புகழை அளிப்பன. கிறிஸ்துவுக்குப் பின் 1003 தொடக்கம் 1070 ம் ஆண்டுவரை அதாவது 67 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த சோழ மன்னர்கள் இலங்கையிலுள்ள சைவ ஆலயங்களைப் பழுது பார்ப்பதிலும், திருத்தியமைப்பதிலும் அதிக கவனஞ் செலுத்தினரென்பது குறிப்பிடத் தக்கது. திருக்கேதீச்சரத்திற் பல கோபுரங்கள் அமைந்த அதியுன்னதமான கட்டடமொன்று அமைக்கப்பட்டு இராஜ இராஜேஸ்வரம் என்ற பெயர்பெற்று விளங்கியது.

### போர்த்துக்கேயரின் அழிவுச் செயல்:

ஆனுல், போர்த்துக்கேயர் ஆட்சிபுரிந்த காலத்தில் அநேக சைவக் கோயில்களை அவர்கள் அழித்தனர் 1624-ம் ஆண்டிலே திருக்கேதீஸ்வரக் கோயிலை அவர்கள் அழித்தனர். அக்கோயிற் கற்களைப் பயன்படுத்தி மன்னூரிற் கோட்டையொன்றை அமைத்தனர்.

பிரித்தானிய ஆட்சியின்போது சைவ மக்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் கிடைத்த போதிலும், ஆலயங்களைத் திருத்தியமைக்கும் வேலை துரிதமாக நடைபெருதிருந்தது பழைய மாதோட்டம் எனும் மாந்தையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆரம்பித்த இயக்கமொன்றன் விளைவாகச் சிறிய கோயில் ஒன்று 1903 ஆம ஆண்டில் இங்கு கட்டப்பட்டது. எனினும் 1948 ம் ஆண்டிலே ஆவணி மூலத்தன்ற ஞானியொருவர் பழைய பாலாவித் தீர்த்தத்தைக் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து புனருத்தாரண இயக்கம் தீவிரமாக இன்று நடத்தப்பட்டு வருகின்றது.

1948 ம் ஆண்டிலே திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை அமைக்கப்பட்டு சைவ ஆகமத்திற்கமையக் கருங்கலால் ஆலயத்தை அமைக்கத் திட்டமிட்டனர். 1953 ம் ஆண்டிலே கட்டட வேலை ஆரம்பமானது. இன்றுவரை 8 இலட்சத்திற்கு மேற்பட்ட ரூபாய் செலவில் பிரகார மூர்த்திகளின் ஆலயங்கள், இராஜ கோபுரம், மணிக்கோபுரம், மடங்கள் முதலியன அமைக்கப்பட்டு முள்ளன.

இம்மாதம் 27ந் தேதியன்று சிவன்கோயில் மூலஸ்தானமும் கௌரி அம்பாள் ஆலயமும் திருத்தி யமைத்தற்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெறும். இத் திருப்பணியினைச் செய்து முடிக்க 5 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவாகும். இன்னும் ஓராண்டுக்குள் முழுமையான சிவன்கோயில் அமைந்திருக்கு மென்று எதிர்பார்க்கப் படுகின்றது. மிகச் சிறந்த திராவிட சிற்ப வேலைப்பாடு அமைந்ததும் சைவ மக்கள் பெருமைபடத் தக்கதுமான உன்னதமான கட்டடமொன்று உருவாகும். இது சைவமக்கள் அனைவரும் உள்ளன்புடன் பூசிக்கவேண்டிய ஆலயம். இதுவே கேது வணங்கிய தலம்; இராவணேஸ்வரன் பூசித்த தலம்; அகஸ்தியர் ஓதிய கோயில்; விஜயன் ஆதரித்தஇடம்; சோழரும் பாண்டியரும் சிற்ப வேலையை ஊக்குவித்த புண்ணிய க்ஷேத்திரம்; ஞானசம்பந்தர் சுந்தரர் பாடிய சிவாலயம். இது இன்றோ நேற்றோ தோன்றியதன்று. இது புராதன சிவாலயம். இது எக்காலத்து முளது. சூரிய, சந்திரர் இருக்கும்வரை நிலைப்பது. இத்தகைய மகிமை பொருந்திய ஆலயத்திற்குச் சைவமக்கள் எல்லோரும் ஆதரவளித்து இதனைப் பூசித்தல் பொருத்தமானதே!

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 11243

அச்செழு நற்பொழுத கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
சின்னத்தம்பி சின்னையா கைம்பெண் அரத்தினம்
எதிராக —வழக்காளி
உருப்பிராய வடக்கு, அரதஜனசாபக வைத்திலிங்கம் —எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M. B. 11243-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1971-ம் ஆண்டு ஐப்பசி மீ 20-ந்திகதி (20-10-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4937/-ம், 13-11-69 தொடக்கம் 30-5-70 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 359-46 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்காய்ப்பிரிவு கரச்சி கோவிற்பற்று குஞ்சுப்பரந்தனிறை "சின்னட்டியார்தறை" பா. செ. இலா. 200 உறுதிகளின்படி, சில உறுதிகளின்படி பா. செ. இலா. 375 ஆனல் தெல்லிப்பளை உத்தரவு பெற்ற உலாந்தா கெ. சின்னப்புவின் 27-7-62 திகதியுடைய இல: 126ம் படத்தின்படி 8 ஏக்கர் 2 றூட் 36 பேர்ச் இச்சொல்லப்பட்ட படத்தில் முதலாம் துண்டாகக காட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை வடக்கு தளையசிங்கத்திறைதனம், கிழக்கு முடிககுரிய காணி இரண்டாம் துண்டாக இச்சொல்லப்பட்ட படத்தில் காட்டப்பட்டுள்ளதும் எஸ். செல்லையா, எஸ் கணபதிப்பிள்ளை ஆகியோரிறுதங்களும், தெற்கு ஆர். தம்பிப்பிள்ளைககும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு முடிக்குரிய காணி

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
26—8—71

அ. போ. எதிர்மனசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 212 3—9—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
வழக்கு இல: M, B. 10158

சங்கானை 1. தம்பையா நடராசா —வழக்காளி
எதிராக
மாதகல் 1. ஐயன் மாணிக்கனும் அவரின் மனைவி
2. கனகலோகமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10158 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஞு ஐப்பசி மீ 2-ம்திகதி (2-10-71) சனிக்கிழமை முற்பகல் 10-30மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று என்னுல் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1106/-ம், 20-7-68 தொடககம் 18—2—69 வரைக்கும் ரூபா 750/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 254-62 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு பண்டத்தரிப்பு கோவிற்பற்று சில்லாலையில் 'கொல்லன் சந்தை' என்று அழைக்கப்படும் வயல்பரப்பு 4ம் 3 குளியும் வான்பயிர் செய்பயிர்களும் கிழக்கெல்லையில் உள்ள கிலத்தின் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு M. கந்தனினதும் வல்லியன் சின்னத்துரையினதும் ஆதனம், எல்லை வடக்கு சின்னத்துரையின் ஆதனமும் வாய்க்காலும், எல்லை தெற்கு சின்னட்டி ஐயனுடையதும் பங்காளரினதும், எல்லை மேற்கு இராமன் ஆறுமுகததானின் ஆதனம் மேற்படி வலப்பக்கமாக 6 அடி அகலப்பாதை கிழக்கில் இருந்து தெற்குப் பக்கமாகப் பாவிப்பு உரித்துடையது.

வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கொண்டாவில்,
20 8-71.

சி. ஆ. த. வடிவேலு, J. P.
கொமிஷனருக்; விலை மதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்:
எம் 213 3—9—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M, B. 11112

கனகசபை சின்னத்துரை சுன்னுகம் தெற்கு சுன்னுகம்
எதிராக —வழக்காளி
பொன்னையா செல்வரத்தினம் உடுவில் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11112-ம் இலக்க வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஆ. ஐப்பசி மீ 9உ சனிககிழமை (9-10-71) முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல்வட்டி ரூபா 2558-33 சதம். 20-9-69 தொடககம் 2-5-70 வரைக்கும் ரூபா 2,000/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 182-92 சதம், (இதில் ரூபா 1125/- குறைத்து)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று சங்குவேலி இறை "கரந்தன்" நெல் பரப்பு இல. 5 எல்லை கிழக்கு பொன்னையா தர்மரத்தினத்தின் ஆதனம், வடக்கு வல்லிபுரம் பொன்னையாவின் ஆதனம். மேற்கு கணபதி செல்லத்துரையின் ஆதனம். தெற்கு கந்தையா அரியரத்தினத்தின் ஆதனம். இது அடங்கலும். மேற்கு எல்லையில் இருக்கும் கிணத்தில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் உருததும், பதிவு H 370/261,

அராலி வடக்கு
வட்டுக்கோட்டை. 27-8-71

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 216 3-9-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 3—9—1971 ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் ...